

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு.கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் நேற்று (10–4–2026) காலை 7 மணிக்கு தொடங்கி 139வது வார்டு முழுவதும் வாக்குச் சேகரித்தார். இந்நிகழ்வில் பகுதி கழக செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி, தொகுதி பொறுப்பாளர் சைதை சாதிக், வட்ட கழக செயலாளர் சை.மு.சேகர், காங்கிரஸ் ஜோதிபொன்னம்பலம், வி.சி.க ம.ஜேக்கப், ம.தி.மு.க. ப.சுப்பிரமணி, தே.மு.தி.க – ஆனந்தன், ம.நீ.ம. – கதிர், எஸ்.டி.பி.ஐ. – அபுதாகிர், பிலால், இ.யூ.மு.லீக் – கவுஸ் ஃபேக், த.மு.மு.க சாகுல்ஹமீது, அப்துல் ஜபார், சி.பி.ஐ. – சிவா, சி.பி.எம்.வேல்முருகன், உள்ளிட்ட ஏராளமான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியினர் பங்கேற்றனர்.




சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர் காரம்பாக்கம் க.கணபதி சேக்மானியம் பள்ளி வாசலில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இந்நிகழ்வில் மாவட்ட அமைப்பாளர் எஸ்.பி.அருள், வட்ட கழக செயலாளர் சி.சுந்தர் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெல்லும் வேட்பாளர்களை ஆதரித்து

# விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாக்கு சேகரிப்பு!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!



விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் செஞ்சி தொகுதி தி.மு.க. வேட்பாளர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் எம்.எல்.ஏ, உதயசூரியன் சின்னத்திலும், மயிலம் தொகுதி தே.மு.தி.க. வேட்பாளர் வெங்கடேசன் முரசு சின்னத்திலும், திண்டிவனம் தொகுதி வி.சி.க. வேட்பாளர் வன்னியரசு பானை சின்னத்திலும் போட்டியிடுகின்றனர்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி சார்பில் போட்டியிடும் வெல்லும் வேட்பாளர்களை ஆதரித்து கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் (13.4.2026 - திங்கட்கிழமை) மாலை 4.00 மணிக்கு,

உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் செஞ்சி தொகுதி தி.மு.க. வேட்பாளர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் எம்.எல்.ஏ. வை ஆதரித்து செஞ்சி, விழுப்புரம் சாலை கன்மலை கிறிஸ்துவ ஆலயம் அருகிலும்,

முரசு சின்னத்தில் போட்டியிடும் மயிலம் தொகுதி தே.மு.தி.க. வேட்பாளர் வெங்கடேசனை ஆதரித்து தீவனூரிலும்,

பானை சின்னத்தில் போட்டியிடும் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி வி.சி.க. வேட்பாளர் வன்னியரசுவை ஆதரித்து மாலை 6.00 மணிக்கு திண்டிவனம் மேம்பாலம் அருகில் நடைபெறும் பிரச்சார பொதுக்கூட்டத்திலும் கலந்து கொண்டு வாக்கு சேகரிக்கிறார்.

இந்தப் பிரச்சார பொதுக்கூட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், அனைத்து அணிப் பொறுப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள், தி.மு.க. நிர்வாகிகள், தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ.**
பொறுப்பாளர், விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

### ‘இராயபுரத்தில் வெல்வோம் ஒன்றாக’

# இராயபுரம் சட்டமன்ற தொகுதி கிழக்கு பகுதியில் கழக வெற்றி வேட்பாளர் டாக்டர் அ.சுபேர் கான் வீடு வீடாக வாக்கு சேகரிப்பு!

## இராயபுரம் கிழக்கு பகுதி கழகச் செயலாளர் இரா. செந்தில்குமார் அறிவிப்பு!

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் கிழக்கு பகுதி 50–வது வட்டத்தில் பகுதிச் செயலாளர் இரா.செந்தில்குமார் தலைமையில் வட்டச் செயலாளர் ஆர்.வி.கணேஷ் முன்னிலையில் 11.4.2026 காலை 7 மணி முதல் இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் திமுக வெற்றி வேட்பாளர் டாக்டர் அ.சுபேர் கான் எம்.எஸ்.,(ஆர்த்தோ), அவர்கள் காசி கார்டன் 3–வது தெரு துவங்கி வீடு வீடாக, பொதுமக்களை சந்தித்து வாக்குகளை சேகரிக்கின்றார்.

இந்நிகழ்ச்சியை தொகுதி பார்வையாளர் திரு. கலாநிதி வீராசாமி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம்ஸ் மூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தா.இளைய அருணா, நா.மனோகரன் ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

மேலும், தோழமைக் கட்சிகளைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொள்ளவிருக்கின்றனர் என பகுதிக் கழகச் செயலாளர் இரா. செந்தில் குமார் தெரிவித்துள்ளார்.

வேட்பாளர் வாக்கு சேகரிக்கும் தெருக்களின் பட்டியல் விவரம் பின்வருமாறு:–

**நாள்: 11.04.2026 – காலை: 7.00 மணி**

**50-வது வட்டத்தில் வேட்பாளர் டாக்டர். சுபேர் கான் வாக்கு சேகரிக்கும் இடங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | காசி கார்டன் 3வது தெரு | 9. | ஜீவரத்தினம் பி–பிளாக் |
| 2. | ஏ.ஜெ.காலனி முதல் தெரு | 10. | துரை தெரு |
| 3. | ஏ.ஜெ.காலனி 2வது தெரு | 11. | மாரியம்மன் கோவில் தெரு |
| 4. | ஏ.ஜெ.காலனி 3வது தெரு | 12. | தம்பு லேன் |
| 5. | ஏ.ஜெ. காலனி 4வது தெரு (சேணியம்மன் கோவில்) | 13. | பக்கிரி தெரு |
| 6. | வாத்தியார் ஏகப்பன் தெரு | 14. | உசேன் மேஸ்திரி தெரு |
| 7. | இந்திரா நகர் (செங்காளம்மன் கே–ாவில் குடிசை பகுதி) | 15. | துலுக்காணத்தமன் கோவில் தெரு |
| 8. | ராஜரத்தினம் நகர் கே–பிளாக் | 16. | ஜி.எம்.பேட்டை சந்து துறைமுகம் கேட் |

### மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தோழர் எம்.ஏ.பேபி சிறப்புரை!

# வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து மந்தவெளியில் பரப்புரைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் எஸ்.முரளி வேண்டுகோள்!

*சென்னை, ஏப்.11-*

*மயிலை கிழக்குப் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-*

*மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி மயிலை தொகுதி வெற்றி வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் எம்.ஏ.பேபி இன்று (11.4.2026 சனிக்கிழமை) மாலை 4 மணியளவில் மந்தவெளி மார்க்கெட் அருகில் நடைபெறும் பரப்புரைக் கூட்டத்தில் வாக்கு சேகரித்து சிறப்புரையாற்றுகிறார்.*

*இதில் மயிலை கிழக்குப் பகுதியைச் சேர்ந்த அனைத்து கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர் கலந்துகொள்ளுமாறு பகுதிச் செயலாளர் எஸ்.முரளி வேண்டுகோள் விடுத்துள்ளார்.*



திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் கள நிலவரம் குறித்து மாவட்ட கழக அலுவலகத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் தலைமையில் அவசர செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் வி.ஜி. ராஜேந்திரன் ஆதரித்து வெற்றி பெற செய்ய வேண்டும் என்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார் உடன் மாவட்ட அவைத் தலைவர் திராவிட பக்தன் தொகுதி பார்வையாளர் மாஸ்டர் பெ. சேகர், மாநில மாவட்ட நிர்வாகிகள் ஆர்.டி.இ.ஆதிசேஷன், குருதாஸ், டாக்டர் வி.சி.ஆர். குமரன், ஜெயபாரதி, உதய மலர்பாண்டியன், ப. சிட்டிபாபு, எஸ்.கே. ஆதாம் சி.சு. ரவிச்சந்திரன், மற்றும் கழக நிர்வாகிகள் அணிகளை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் வேளச்சேரி சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் அசன் மௌலானா வேளச்சேரி மேற்கு பகுதி உட்பட்ட 175 வது வட்டத்தில் வீடு வீடாக சென்று தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வாக்கு சேகரித்தார். இதில் கூட்டணி கட்சிகளின் மாவட்ட தலைவர்கள், வேளச்சேரி மேற்கு பகுதி பொறுப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி, மாவட்டப் பொருளாளர் எஸ்.பாஸ்கரன் எம்.சி, வட்டச் செயலாளர் க.பாரதிதாசன், வட்டக் கழகச் செயலாளர் வி.சக்திவேல், கூட்டணி கட்சி தோழர்கள், அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### விவசாயிகள், கூலித் தொழிலாளிகளின் பிள்ளைகளை

# ‘நான் முதல்வன்’ திட்டம் மூலம் மாவட்ட ஆட்சியர் ஆக்கியவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## செஞ்சி தொகுதி தேர்தல் பரப்புரையில் – செஞ்சி மஸ்தான் பேச்சு!

செஞ்சி, ஏப், 11 –

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி திமுக சார்பில் விழுப்புரம் வடக்கு மாவட்டசெயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மூன்றாவது முறையாக போட்டியிடுகிறார்.

செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமையில் செஞ்சி கிழக்கு ஒன்றியம் அத்தியூர், கொசப்பாளையம், தச்சம்பட்டு,கீழ் நெல்லி மலை, நடுநெல்லிமலை, மூல நெல்லி மலைஆகிய கிரா மத்தில் வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத் திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது வாக்காளர்களிடம் திமுக வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வாக்கு சேகரித்து பேசுகையில்:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கல்விக்கும் மருத்துவத்திற்கும் எண்ணற்ற பல திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி உள்ளார் அந்த வகையில் கூலித் தொழிலாளியின் விவசாயி யின் மகளை புதுமைப்பெண் நான் முதல்வன் திட்டத்தில் படிக்க வைத்துகரண்டி பிடித்த கை இன்றைக்கு கலெக்டர் ஆக்கியபெருமை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

தமிழ்நாடு முதலமைச்சர் தற்போது திமுக தேர்தல் அறிக்கையில் பல்வேறு திட்டங்களை முதல மைச்சர் அறிவித்துள்ளார். முதலமைச் சரின் காலை உணவு திட்டம் எட்டாம் வகுப்பு வரை விரிவு படுத்தப்படும். மகளிர் உரிமைத்தொகை ரூ2000 ஆக உயர்த்தி வழங்கப்படும் . நான் முதல்வன் தமிழ் புதல்வன் திட்டத் தில் பயன் அடையும் கல்வி மாணவர்களுக்கு மாதம் ரூ.1500. விவசாயிகளின் நலன் கருதி நெல் குவின்டாலுக்கு ரூ.3500 கரும்புட்டான் ஒன்றுக்கு ரூ.4500. மேலும் முதலமைச்சர் அறிவித்துள்ள சிறப்பு வாய்ந்த இத்திட்டங்களை மீண்டும் செயல்படுத்துவதற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்தலைமையிலான 2.0 ஆட்சி மீண்டும் தொடர்வதற்கும் வாக்காளர்கள் ஆகிய நீங்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக உதய சூரியன் சின்னத்திற்கு வாக்களித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெற செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயரா கவன், ஒன்றிய துணைச் சேர்மன் ஜெயபாலன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், காங்கரஸ்வட்டாரத் தலைவர் சக்திவேல் சூரிய மூர்த்தி,கோனை ராஜா,தேமுதிக மாவட்ட பொருளாளர் தயாநிதி, சாரங்கபாணி, பிரபு, விசிக மாவட்ட செயலாளர் சிவா, நன்மாறன், திமுக ஒன்றிய நிர்வாகிகள் வாசு, ஆறுமுகம், அய்யாதுரை, இக்பால், செல்வமணி,

ஒன்றிய கவுன்சிலர் மணி, ஊராட்சி மன்ற தலைவர் பாடிப்பள்ளம் தாட்சயாணி கார்த்திகேயன் முன்னால் ஊராட்சி மன்ற தலைவர் ரவிச்சந்திரன், ஊராட்சி கழக நிர்வாகிகள் அத்தியூர் விஜயகுமார், குணசேகரன், மாயவன், சண்முகம், ஜெய்சங்கர், கொச பாளையம் ஏழுமலை, நாகப்பன், காந்தி, தச்சம்பட்டு செந்தில் முருகன், மோகன் பெரியார், ஏழுமலை, தணிகாசலம், அஞ்சுலா தேவி ஆறுமுகம், கிருஷ்ணமூர்த்தி, வெங்கடேசன், நெல்லிமலை ஆனந்தன், கதிரவன், நாகமுனி, ராஜாராம், ஏழுமலை , பஞ்சமூர்த்தி, சுதாகர், பாண்டியன், செஞ்சி ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் பழனி உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகள் திமுக நிர்வாகி கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆயிரம்விளக்கு சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் நா.எழிலனை ஆதரித்து வள்ளுவர் கோட்டம் சுதந்திர தின பூங்கா அருகிலும், தியாகராயர் நகர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் ராஜா அன்பழகனை ஆதரித்து தியாகராய நகர் பேருந்து நிலையம் அருகிலும், விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜாவை ஆதரித்து எம்.ஜி.ஆர். நகர் மார்க்கெட்டிலும் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரிப்பில் தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவைத் தலைவர் கி.நடராசன் தலைமையில் தொ.மு.ச. பேரவை நிர்வாகிகள், மாநகர போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்க பொதுச் செயலாளர் த.சரவணகுமார், பொருளாளர் கி.சீனிவாசன், நிர்வாக பணியாளர் சங்க பொதுச் செயலாளர் சி.மகேந்திரன் மற்றும் தலைமை சங்க நிர்வாகிகள், பணிமனை செயலாளர்கள், சங்க செயல் வீரர்கள் பெருந்திரளாக கருப்பு, சிவப்பு சீருடையுடன் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



மயிலை மேற்கு பகுதி தி.மு.க மாணவர் அணி சார்பில் 123வது வட்டம் முழுவதும் வீடு வீடாக சென்று பிரச்சாரம் நடைபெற்றது. உடன் மாணவரணி அமைப்பாளர் எஸ்.சரவணன், மாணவர் அணி மாவட்ட து.அமைப்பாளர் தா.தாமு மற்றும் ம.முகிலன் கார்த்திக், ஜீவா, மணிகண்டன் அருண்குமார், சங்கர், வீரராகவன், மற்றும் கல்லூரி மாணவர்கள், மயிலை மேற்கு பகுதி மாணவர் அணி மற்றும் கழக செயல் வீரர்கள் கலந்துகொண்டனர். மயிலை மேற்கு பகுதி மாணவரணி அமைப்பாளர் ஆர்.ராமு நன்றி கூறினார்.